# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) : **Phone**
416-264-6545 : **Fax**
office@olghtamilparish.com : **Email**
www.olghtamilparish.com : **Website**




என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

நான் உங்களோடு சேர்ந்து செபிக்கும் சங்கீதம் 91 இனை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

“உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, நீரே என் புகலிடம் என் அரண் நான் நம்பியிருக்கும் இறைவன்’ என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன் அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன். நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன் என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.”

ஞாயிறு திருப்பலிகளிலும் விசேட திருப்பலிகளிலும் உங்களைக் காண்பதிலும் உங்களோடு இணைந்து திருப்பலிகளை ஒப்புக்கொடுப்பதிலும் மகிழ்ச்சியடைவதுடன் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியையும் கூறி நிற்கின்றேன்.

1. உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி என்ற வாக்குக்கு அமைவாக எமது ஆலயத்திற்கு வருகின்ற பங்குமக்கள், பணியாளர்கள், குருக்கள் அனைவரது ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் கவனத்தில கொண்டு, நாம் எமது உண்மையான செயற்பாட்டில் அதை வெளிப்படுத்துவது அவசியம்.

2. கோவிட்-19 பெருந்தொற்று யாரையும் பாதித்துவிடாமல் இருப்பதற்கு நடைமுறையிலுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

3. ஒரு நேரத்தில் ஆலயத்தினுள் சிறு தொகையினர் மட்டுமே திருவழிபாடுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதால் உங்கள் இருக்கைகளை முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். எமது இணையத்தளத்திலும், முகநூல் பக்கத்திலும், முன்பதிவு செய்வதற்கான இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்களில் புரிதலுடனான உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

இறந்த ஆன்மாக்களின் நினைவு நாளான கார்த்திகை 2ம் திகதி திங்கட்கிழமை மாலை 6:00 மணிக்கு தனிப்பட்ட வழிபாட்டிற்காக நற்கருணை எழுந்தேற்றமும் செய்யப்பட்டு, மாலை 6:30 மணிக்கு நற்கருணை ஆசீரும் தொடர்ந்து விசேட திருப்பலியும் இடம்பெறும்.

இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் இக்கார்த்திகை மாதத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6:00 மணிக்கு தனிப்பட்ட வழிபாட்டிற்காக நற்கருணை எழுந்தேற்றமும் செய்யப்பட்டு, மாலை 6:30 மணிக்கு நற்கருணை ஆசீரும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

கார்த்திகை 28ம் திகதி சனிக்கிழமை உலகம் முழுவதிலும் கோவிட்-19 பெருந்தொற்றினால் இறந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாலை 6:00 மணிக்கு தனிப்பட்ட வழிபாட்டிற்காக நற்கருணை

எழுந்தேற்றமும் செய்யப்பட்டு, மாலை 6:30 மணிக்கு நற்கருணை ஆசீரும் தொடர்ந்து விசேட திருப்பலியும் இடம்பெறும்.

கார்த்திகை 30ம் திகதி திங்கட்கிழமை மாலை 6:00 மணிக்கு தனிப்பட்ட வழிபாட்டிற்காக நற்கருணை எழுந்தேற்றமும் செய்யப்பட்டு, மாலை 6:30 மணிக்கு நற்கருணை ஆசீரும் தொடர்ந்து தமிழ் ஆங்கில மொழிகளில் விசேட திருப்பலியும் இடம்பெறும்.

கார்த்திகை மாதத்தில் நடைபெறும் திருப்பலிகளில் உங்களின் உறவுகளுக்காக விசேடமாக மன்றாட விரும்பினால் அவர்களின் பெயர்களை எழுதிக் கொண்டு வந்து அதற்கான பெட்டியினுள் போடவும்.

இறந்த அனைத்து விசுவாசிகளும் தங்களின் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்று நிலையான விண்ணக வாழ்வை பெற்று கொள்ளவேண்டும் என்று இம்மாததில் நாம் அனைவரும் சிறப்பாக மன்றாடுவோம்.

எமது பங்கு அலுவலகம் வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து மதியம் 2 மணிவரை திறந்திருக்கும். அத்துடன் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை, எமது அலுவலக தொலைபேசியில் (416-264-6544) அழைத்து உங்களின் ஆன்மீக தேவைகள் அல்லது வேறு பங்கு சார்ந்த விடயங்கள் தொடர்பாக கதைக்கலாம். முன்னேற்பாட்டுடன் நேரடியாக சந்திக்க விரும்பினால் கோவிட்-19 விதிமுறைகளுக்கு அமைவாக சந்திக்கலாம். என்னைத் தொடர்புகொள்ள முடியாது போனால் உங்களுடைய பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் தெளிவாக பதிவுசெய்தால் நான் கூடிய விரைவில் உங்களுடன் தொடர்பு கொள்ளுவேன்.

எமது பங்கு மக்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்ற நான் எந்நேரமும் ஆயத்தமாக இருக்கின்றேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் பல இன்னல்களோடு உங்கள் இல்லங்களில் வாழந்து வருகின்ற இவ்வேளையில் நீங்கள் அனைவரும் உடல் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியாகவும் ஆன்மீகத்தில் ஒரே குடும்பமாக நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சி என்னுடைய நாளாந்த செபங்களில் உங்களனைவரையும் நினைந்து மன்றாடுகின்றேன். அனைத்து துறைகளிலும் சேவைபுரிகின்ற முன்னிலை பணியாளர்களுக்காகவும் எமது செபங்களில் முக்கியமாக மன்றாடுவோம். மேலும் எனக்காகவும் சக குருக்களுக்காகவும் எமது பணிக்காகவும் உங்கள் செபங்களில் மன்றாடுங்கள்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா, இறைவனின் தாய் தூய கன்னிமரியாளின் பெருவிழா திருப்பலிகளுக்கான விபரங்கள் பின்னர் அறியத்தருவோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தொலைபேசி : 416-264-OLGH (6544)
மின் அஞ்சல் : office@olghtamilparish.com

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,
அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்
பங்குத்தந்தை
தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு